**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண். 248/2024 வா.சா.3 செல்வராஜ்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 18.02.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | செல்வராஜ் | தொழில் | - | |
| த/பெ க/பெ | - | நடராஜன் செட்டியார் | ஜாதி | - | |
| கிராமம் | - | நாட்டுக்கல்பாளையம் | வயது | - | 63 |
| தாலூக்கா | - | பொள்ளாச்சி | தேதி | - | 18.02.2026 |

முதல் விசாரணை

நான் நாட்டுக்கல்பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

| Sl.No. | Date | Exhibits Marked | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1 | | **சா .சா.ஆ.1** | வா.சா. 3 ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பிட்ட நகல் |

**1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

1) வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து உள்ளார்கள் என்றால் காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பன் வாரிசு சான்று கோரி தாக்கல் செய்து உள்ளார்கள் . காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பன் வாரிசு சான்று கோரி 2 ம் பிரதிவாதியிடம் வாதிகள் மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

2) 3, 4 பிரதிவாதிகள் ஆகிய கண்ணம்மாள், திருமலைச்சாமி ஆகியோர் யார் என்றால் குப்பாண்ட கவுண்டர் மகள் நாச்சம்மாளின் குழந்தைகள் ஆவர். குப்பாண்ட கவுண்டர் மக்காளன பரமசிவம், காணியப்ப கவுண்டர், காளியப்ப கவுண்டர் , பழனி கவுண்டர் , மற்றும்

நாச்சம்மாள் ஆகியோர் மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு முன் இறந்தனரா அல்லது பின் இறந்தனரா என்றால் மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு முன்னரே மேற்படியோர் இறந்துவிட்டனர்.

3) நான் கூறும் கூற்றுப்படி பார்த்தால் 5 ம் வாதி மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு வாரிசாக மாட்டார் என்றால் சரியல்ல. வாதிகள் கோரும் பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

1) வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து உள்ளார்கள் என்றால் காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பன் வாரிசு சான்று கோரி தாக்கல் செய்து உள்ளார்கள் . காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பன் வாரிசு சான்று கோரி 2 ம் பிரதிவாதியிடம் வாதிகள் மனு கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

2) 3, 4 பிரதிவாதிகள் ஆகிய கண்ணம்மாள், திருமலைச்சாமி ஆகியோர் யார் என்றால் குப்பாண்ட கவுண்டர் மகள் நாச்சம்மாளின் குழந்தைகள் ஆவர். குப்பாண்ட கவுண்டர் மக்காளன பரமசிவம், காணியப்ப கவுண்டர், காளியப்ப கவுண்டர் , பழனி கவுண்டர் , மற்றும் நாச்சம்மாள் ஆகியோர் மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு முன் இறந்தனரா அல்லது பின் இறந்தனரா என்றால் மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு முன்னரே மேற்படியோர் இறந்துவிட்டனர். 3, 4 பிரதிவாதிகளும் வாதிகளுடன் சேர்ந்து மேற்படி காளியப்ப கவுண்டர் மகன் காணியப்பனுக்கு வாரிசுகள் என்றால் சரிதான் .

இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**ஒப்பம்/-(மு.ச.ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி